**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 71/2023 P.W. 1 /LW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. பிரேமலதா** | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.05.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது கல்லுக்கூட்டம் பிள்ளைவிளையில் வசித்து வருகிறேன். 17.10.2022 ம் தேதி நான் எனது வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த போது இரவு 11.15 மணிக்கு எனது கழுத்தில் கிடந்த கோவி மாடல் செயினை ரெயின் கோர்ட் அணிந்திருந்த நபர் ஒருவர் செயினை கழற்றி எடுத்தார். செயின் கழற்றும் போது செயின் லாக்கெட் கழன்று கீழே விழுந்தது. நான் சத்தம் போட்டவுடன் மாடியில் இருந்த எனது மகன் சிபுராஜன் எனது மருமகள் கரோலின் வினிஷாவும் ஓடி வந்துப் பார்த்த போது செயினை எடுத்த நபர் ஓடிவிட்டார்.

2. எனது மகன் சிபு ராஜனும் நானும் இது குறித்து நடவடிக்கை எடுக்கும்படி குளச்சல் காவல்நிலையத்தில் புகார்கொடுத்தேன். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்.** குளச்சல் காவல்நிலையத்தில் இருந்து செயின் கிடைத்ததாக தகவல் கொடுத்தார்கள். நான் அதனை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். அதை என் கழுத்தில் அணிந்துள்ளேன். மேற்படி **தடயப்பொருள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னைவிசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை -குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள்ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் ஆஜர்.

குறுக்கு விசாரணை

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 71/2023 P.W. 2 /LW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. கரோலின் வினிஷா** | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.05.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது கல்லுக்கூட்டம் பிள்ளைவிளையில் வசித்து வருகிறேன். அ.சா1 எனது அத்தை. 17.10.2022ம் தேதி எனது அத்தை வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த போது இரவு 11.15 மணிக்கு அவரது சத்தம்கேட்டு நானும் எனது கணவர் சிபுராஜனும் கீழே வந்துப் பார்த்த போது ரெயின் கோர்ட் அணிந்திருந்த நபர் ஒருவர் கிச்சன் கதவை திறந்து வெளியே ஓடினார். எனது அத்தை தனது கழுத்தைப் பார்த்த போது செயினை காணவில்லை. அந்த செயினின் கொக்கியும் லாடரும் கீழே கிடந்தது. எனது அத்தை மற்றும் எனது கணவர் சேர்ந்து குளச்சல் காவல்நிலையத்தில் நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தார்கள்.

**குறுக்கு விசாரணை -குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள்ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் ஆஜர்.**

குறுக்கு விசாரணை இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்